FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | கணக்கீடு - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு விடையும் புதிய தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

*01)* வரையறுத்த சில்வா பொதுக்கம்பனியின் 31.03.2015 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ000) | செலவு (ரூ000) |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்குமுதல் (100000 பங்குகள்) | | 30000 |
| 01.04.2014 இல் நிறுத்தி வைத்த இலாபம் | | 2500 |
| விற்ற சரக்கின் கிரயம், விற்பனை | 175000 | 371800 |
| 10% வங்கிக் கடன் | | 20000 |
| விநியோகச் செலவுகள் | 16800 | |
| நிர்வாகச் செலவுகள் | 2000 | |
| ஏனைய செலவுகள் | 7500 | |
| நிதிச் செலவுகள் | 2500 | |
| செலுத்திய வருமான வரி - 2014/2015 | 5500 | |
| - 2013/2014 | 1600 | |
| காணி | 150000 | |
| கட்டிடங்கள் | 12000 | |
| மோட்டார் வாகனங்கள் | 10500 | |
| 01.04.2014 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | |
| கட்டிடம் | | 1200 |
| மோட்டார் வாகனம் | | 1900 |
| 31.03.2015 இல் தொக்குகள் | 2000 | |
| வியாபார வருமதியாளர் | 5000 | |
| வியாபார சென்மதியாளர் | | 6000 |
| 01.04.2014 வருமானவரி ஏற்பாடு | | 1500 |
| வங்கி | 15000 | |
| செலுத்திய இடைக்கால பங்குலாபம் | 6000 | |
| முதலீடுகள் | 33500 | |
| வாடகை வருமானம் | | 10000 |

| | | |
|---|---|---|
| | 4449000 | 4449000 |

**மேலதிக தகவல்கள்**

(i) 31.03.2015 இல் இருப்புகளின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 1 800 000

(ii) கம்பனி 31.03.2015 இல் காணியினை மீள்மதிப்பீடு செய்தது. மீள் மதிப்பீட்டின் பின் காணியின் பெறுமதி ரூபா 200 000 000 ஆகும். இது புத்தகங்களில் காட்டப்படவில்லை.

(iii) கம்பனியானது 01.04.2010 இல் ரூபா 1 500 000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை 31.03.2015 இல் ரூபா 1 000 000 க்கு விற்பனை செய்தது. கிடைத்த பணம் வங்கிக் கணக்கில் வரவிலும் மோட்டார் வாகனக் கணக்கில் செலவிலும் பதிந்ததைத் தவிர வேறு எந்த பதிவும் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப் படவில்லை.

(iv) கம்பனியானது நிதிக்குத்தகையின் கீழ் 01.04.2014 இல் மோட்டார் வாகனமொன்றை வாங்கியது. இத்திகதியில் மோட்டார் வாகனத்தின் நியாயமான பெறுமதி ரூபா 2 400 000 ஆக இருந்ததுடன் அது ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதிக்குச் சமமாக இருந்தது. பின்வரும் தகவல்களும் கிடைக்கக் கூடியதாகவுள்ளன.

| | |
|---|---|
| குத்தகைக் காலம் | :- 4 வருடங்கள் |
| மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட் காலம் | :- 5 வருடங்கள் |
| வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் | :- ரூபா 930000 |

நான்கு ஆண்டு காலப் பகுதிக்கான குத்தகை வட்டி பின்வருமாறு

| ஆண்டு | வட்டி ரூபா |
|---|---|
| 2014 / 2015 | 480 |
| 2015 / 2016 | 390 |
| 2016 / 2017 | 290 |
| 2017 / 2018 | 160 |

31.03.2015 இல் முடிவடைந்த வருடத்தில் குத்தகை சென்மதியாளருக்குச் செலுத்திய முதலாவது குத்தகை தவணைக் கட்டணம் ஆனது வியாபார சென்மதியாளர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வேறு பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

(v) வங்கிக் கடன் மீதியில் 01.01.2015 இல் பெறப்பட்டது. வட்டி 31.03.2015 இல் சென்மதியாகவுள்ளது.

(vi) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள வங்கி மீதி 2015 மார்ச் மாத வங்கிக்கூற்று கிடைக்க முன் பெறப்பட்டதாகும். 2015, மார்ச் மாத வங்கிக் கூற்று கிடைத்த பின்னர் கீழ்வரும் தகவல்கள் குறிப்பெடுக்கப்பட்டன.

- ✶ வங்கியில் வைப்பிலிடப்பட்ட போதும் தேறாத காசோலை ரூபா 5 000 000
- ✶ வழங்கப்பட்ட போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 3 000 000

- ✶ ரூபா 1 000 000 வருமதியாளர் ஒருவரால் வியாபார வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்ட போதும் வியாபாரப் புத்தகங்களில் பதியப்படவில்லை.
- ✶ ரூபா 5 00 000 பெறுமதியான காப்புறுதி தொகை வங்கியில் நிலையான கட்டளையின் பேரில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வியாபார புத்தகங்களில் பதியப்படவில்லை.

(vii) வருடத்திற்கான வருமான வரிப் பொறுப்பு ரூபா 8 500 000 என மதிப்பிடப்பட்டது.

(viii) கம்பனியானது வருட முடிவிலுள்ள வியாபார வருமதிகளின் மீதிக்கு 10% ஐயக் கடனுக்காக ஏற்பாடு செய்கிறது.

(ix) கம்பனியானது ஆறுமாத கால உத்தரவாதத்துடன் பொருட்களை விற்பனை செய்கின்றது. நம்பத்தகுந்த மதிப்பீட்டின் படி விற்பனைப் பெறுமதியில் 2% ஐ உத்தரவாதத்திற்கான ஏற்பாடாக மேற்கொள்ளல் வேண்டும்.

(x) கம்பனியினது இயக்குனர்களால் 30.05.2015 இல் எடுக்கப்பட்ட இயக்குனர் சபை தீர்மானத்தின் படி கீழ்வருவன தெரிய வந்தது.

- ✶ இவ்வருடத்துக்கான இறுதிப் பங்குலாபமாக சாதாரண பங்கொன்றுக்கு ரூபா *100* இனைப் பிரேரித்துள்ளது.
- ✶ நிறுத்தி வைத்த வருவாய்களிலிருந்து ரூபா 1 000 000 இனை பொது ஒதுக்கத்துக்கு மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

(xi) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு ஆண்டுக்கு கிரயத்தில் 20% தேய்விடுவது கொள்கையாகும்.

**வேண்டப்படுவது:-**

வரையறுத்த சில்வா பொதுக் கம்பனியின் பிரசுரிப்பதற்கு பொருத்தமான முறையில் பின்வருவனவற்றைத் தயாரிக்குக. (குறிப்புக்கள் உட்பட)

(1) 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று.

(2) 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று.

(3) 31.03.2015 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று.

*(20 புள்ளிகள்)*

*02)* அன்வரும் ஆரிப்பும் இலாப நட்டங்களை முறையே 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்வு செய்யும் பங்காளர்களாவர். 2014 ஏப்பிரல் 01 ஆம் திகதியில் நபீர் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். புதிய பங்குடமை ஒப்பந்தப்படி இலாப நட்டங்கள் 3 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்வு செய்யப்படும், ஒவ்வொரு பங்காளரும் வருடாந்த சம்பளமாக ரூபா 12 000 பெறுவதற்கும், மூலதனத்திற்கு வருடாந்த 5% வட்டி பெறுவதற்கும் உரித்துடையவர்கள்

2015.03.31 இல் உள்ளவாறான கீழ்வரும் பரீட்சை மீதியானது நபீரை புதிய பங்காளனாக அனுமதித்தது தொடர்பான சீராக்கங்களை செய்ய முன்னர் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும். எனினும் நபீர் மூலதனமாகவும் நன்மதிப்பாகவும் காசாக கொண்டு வந்த ரூபா 330 000 மாத்திரம் இதனுள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கட்டடங்கள் - கிரயம் | 487000 | |
| பொறியும் இயந்திரம் - கிரயம் | 240000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயம் | 136000 | |
| வங்கி | 100 000 | |
| 2014.04.01 இல் பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| - கட்டடங்கள் | | 37000 |
| - பொறியும் இயந்திரமும் | | 30000 |
| - மோட்டார் வாகனங்கள் | | 46000 |
| விற்பனைகள் | | 900000 |
| 2014.04.01 இல் இருப்புக்கள் | 290000 | |
| காப்புறுதி | 37000 | |
| மின்சாரம் | 6000 | |
| கொள்வனவு | 645000 | |
| வெளித்திரும்பல் | | 7000 |
| அனுமதிக்கப்பட்ட கழிவு | 4000 | |
| வருமதியாளர் | 300000 | |
| சென்மதியாளர் | | 260000 |
| நபீரினால் கொண்டு வரப்பட்ட காசு | | 330000 |
| மூலதனக் கணக்கு - அன்வர் | | 500000 |
| - ஆரிப் | | 300000 |
| நடைமுறைக் கணக்கு - அன்வர் | 70000 | |
| - ஆரிப் | 25000 | |
| வெளிக்காவுகை கூலி | 40000 | |
| புதிய அலுவலக இயந்திரத்திற்காக செலுத்திய வாடகை | 30000 | |
| | 2410000 | 2410000 |

**மேலதிக தகவல்கள்**

(i) 31.03.2015 இல் இருப்புக்களின் கிரயம் ரூபா 325 000 அவற்றின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 340 000.

(ii) நடைமுறையல்லாச் சொத்துகளுக்கு கிரயத்தில் பின்வரும் வீதத்தில் பெறுமானத் தேய்விடல் வேண்டும்.

கட்டடம் வருடத்திற்கு 5%

பொறியும் இயந்திரமும் வருடத்திற்கு 10%

மோட்டார் வாகனங்கள் வருடத்திற்கு 20%

(iii) வருட இறுதியில் பங்காளருக்குச் செலுத்திய சம்பளம் ரூபா 30 000 ஆனது (ஒவ்வொரு பங்காளருக்கும் ரூபா 10 000) காப்புறுதி கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(iv) நன்மதிப்பு 01.04.2014 இல் ரூபா 120 000 என மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்பு தொடர்பான எல்லாச் சீராக்கங்களும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) இவ் வியாபாரமானது ஆரிப்பிற்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இது தொடர்பாக ஆரிப்பிற்கு வருடாந்த வாடகையாக ரூபா 24 000 செலுத்துதல் வேண்டும். எனினும் 01.01.2015 இல் இவ்வியாபாரமானது ரூபா 30 000 வருடாந்த வாடகையுடன் புதிய இடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன் இத்திகதியில் முழு வாடகைத் தொகையும் செலுத்தப்பட்டது.

(vi) 31.03.2015 இல் அட்டுறு மின்சாரம் ரூபா 5500 ஆக இருப்பதுடன் காப்புறுதியில் ரூபா 2000 முற்பணமாக இருந்தது.

வேண்டப்படுவது:-

*(1)* 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)

*(2)* பங்காளர்களது மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கு

*(3)* 31.03.2015 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று.

*(20 புள்ளிகள்)*

*03)* 01.06.2015 வினோ ரூபா 200 000 ஐ காசாக முதலிட்டு சில்லறை வியாபாரத்தை ஆரம்பித்தார். மேலும் இத்தினத்தில் அவர் வணிகத்தின் பாவனைக்காக ரூபா 120 000 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொண்டு வந்தார். அவர் வியாபாரத்தின் பெயரில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் இவ் வங்கிக் கணக்கினூடாகவே மேற்கொண்டார். முதல் மாத வியாபாரச் செயற்பாட்டினால் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஏற்பட்டன.

| **கொடுக்கல் வாங்கல்கள் இல** | **கொடுக்கல் வாங்கல்** |
|---|---|
| 01 | ரூபா 100 000 இற்கு காசுக்கு பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 02 | ரூபா 80 000 கிரயம் கொண்ட பண்டங்கள் ரூபா 120 000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 03 | ரூபா 200 000 இற்கு பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. |
| 04 | ரூபா 40 000 பெறுமதியான பண்டங்கள் மாதிரிக்கு ஒவ்வாமையினால் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டன. |
| 05 | 15.06.2015 இல் மோட்டார் வான் ஒன்று ரூபா 300 000 இற்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இத்தொகை 24 மாதங்களுள் செலுத்தப்படல் வேண்டும். |
| 06 | ரூபா 120 000 கிரயமுள்ள பண்டங்கள் ரூபா 150 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 07 | அலுவலக ஊழியருக்கு ரூபா 10 000 மாதச் சம்பளம் செலுத்தப்பட்டது. |
| 08 | வினோ தனது சொந்த தேவைக்காக வணிகத்திடம் இருந்து ரூபா 40 000 ஐப் பெற்றுக் கொண்டார். |
| 09 | வியாபார வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய மீதிகள் 10% கழிவுடன் |

தீர்க்கப்பட்டது.

10 கடன்பட்டோரிடமிருந்து வருமதியான தொகைகள் 10% கழிவு அனுமதிக்கப்பட்டு மிகுதிப் பணம் பெறப்பட்டது.

**மேலதிக தகவல்கள்**

✶ 2015 யூன் மாதத்திற்குரிய ரூபா 5000 தொகைக்கான வணிகத்தின் மின்சாரப் பட்டியல் 05.07.2015 இல் பெறப்பட்டது.

✶ வணிகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் கிரயத்தில் 20% வருடாந்தம் பெறுமானத்தேய்விடல் வேண்டும்.

வேண்டப்படுவது:-

*(1)* இல 01 இலிருந்து 10 வரையிலான மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை (பெறுமதியுடன்) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்திக் காட்டுவதுடன், ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிப்பின் (+) எனவும் குறைவடைவின் (−) எனவும் அதன் எதிரே குறிப்பிடுக.

(இதற்காக பின்வரும் மாதிரி அமைப்பினைப் பயன்படுத்துக)

| கொடுக்கல் வாங்கல் இல | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | உரிமை யாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி உபகரணம் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | வங்கி | வியாபார சென்மதிகள் | கடன்கள் | |
| *01* | | | | | | | |
| *02* | | | | | | | |

*(2)* 30.06.2015 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று

*(3)* கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி 30.06.2015 இல் உள்ளவாறான உரிமையாண்மையின் உள்ளடக்கம்.

| | ரூபா |
|---|---|
| ஆரம்ப மூலதனம் | |
| மாதத்திற்கான இலாபம் / நட்டம் | |
| (−) பற்றுக்கள் | |
| 30.06.2015 இல் உள்ளவாறான உரிமையாண்மை | |

*04)* அ) கம்பனியொன்றின் 2015.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

(i) கடன்பட்டோர் பேரேட்டின் சுருக்கம் : *(ரூபா 000)*

| | தரன் | கரன் | பரன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2014.04.01 இலுள்ள மீதி | 110 | 260 | 150 | 520 |
| விற்பனைகள் | 900 | 1500 | 950 | 3350 |
| விற்பனைத் திரும்பல்கள் | (50) | − | − | (50) |
| கொடுத்த கழிவுகள் | − | (10) | − | (10) |

| | | | | |
|---|---|---|---|---|
| பெற்ற காசு | (800) | (1400) | (650) | (2850) |
| 2015.03.31 இலுள்ள மீதி | 160 | 350 | 450 | 960 |

(ii) கடன்கொடுத்தோர் பேரேட்டின் சுருக்கம் : *(ரூபா 000)*

| | கலா | லதா | மொத்தம் |
|---|---|---|---|
| *2014.04.01* இலுள்ள மீதி | 100 | 150 | 250 |
| கொள்வனவுகள் | 1400 | 950 | 2350 |
| கொள்வனவுத் திரும்பல்கள் | (50) | – | (50) |
| பெற்ற கழிவுகள் | – | (10) | (10) |
| செலுத்திய காசு | (1100) | (900) | (2000) |
| 2015.03.31 இலுள்ள மீதி | 350 | 190 | 540 |

(iii) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதிகளானவை அதனுடன் தொடர்புடைய கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பேரேட்டு கணக்குகளின் ஆரம்ப மீதிகளின் மொத்தங்களுடன் இணங்கியுள்ளன.

(iv) வரைபு நிதிக்கூற்றுக்களின் அடிப்படையிலான வருடத்திற்கான இலாபம் ரூபா 1 200 000 ஆகும்.

(v) கீழே தரப்பட்டுள்ள மேலதிக தகவல்களைக் கருத்தில் கொள்ளாமல் வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- ✶ கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக் கணக்கு, கொள்வனவு கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளிலும் ரூபா 500 000 கூடுதலாக பதியப்பட்டுள்ளது.
- ✶ விற்பனைத் திரும்பல், கொள்வனவு திரும்பல் பெற்ற கழிவு, கொடுத்த கழிவு தொடர்பில் நாட்குறிப்பு பதிவுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.
- ✶ தரனின் 2015.03.31 இலுள்ள மீதிக்கு 10% இனை ஐயக்கடனிற்கான விசேட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

வேண்டப்படுவது:-

*(1)* சீராக்கங்கள் செய்ய முன்னர் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு, கடன் கொடுத்தோன் கட்டுப்பாட்டுக் கணக்கு

*(2)* கடன் கொடுத்தோன் கட்டுப்பாட்டு கணக்கில் சீராக்கங்கள்

*(3)* கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் சீராக்கங்கள்

*(4)* ஆண்டிற்கான இலாபத்தை சீராக்கும் கூற்று

*(10 புள்ளிகள்)*

ஆ) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட மலர்விழி கம்பனிக்குச் சொந்தமாகவுள்ள மோட்டார் வாகனம் தொடர்பானவையாகும்.

| மோட்டார் வாகன இல | கொள்வனவு திகதி | கிரயம் (ரூபா000) | எஞ்சிய பெறுமதி (ரூபா000) | பயன்தரு ஆயுட்காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|---|
| NP XY 3400 | 01.10.2011 | 1000 | 200 | 5 |
| NP MN 4348 | 01.04.2012 | 1700 | 200 | 6 |
| NP BC 2536 | 01.07.2014 | 1600 | 400 | 6 |

**மேலதிக தகவல்கள்**

(i) எல்லா மோட்டார் வாகனங்களும் அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பாவனைக்கு தயாரான நிலையில் உள்ளதுடன் அவை கிரயத்தில் வருடாந்தம் நேர்கோட்டு முறையின் கீழ் பெறுமானத் தேய்விடப்படுகின்றன.

(ii) மோட்டார் வாகன இல $NP\ XY$ 3400 ஆனது 01.10.2014 இல் ரூபா 700 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(iii) மோட்டார் வாகன இல $NP\ MN$ 4348 இன் பயன்தரு ஆயுட்காலம் 01.04.2014 இல் 6 வருடங்களிலிருந்து 10 வருடங்களாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் இதன் எஞ்சிய பெறுமதியில் எதுவித மாற்றமும் இல்லை.

வேண்டப்படுவது:-

31.03.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.

(1) மோட்டார் வாகனம்

(2) மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு ஏற்பாடு

(3) மோட்டார் வாகன அகற்றல்

(05 புள்ளிகள்)

05) அ) வரையறுக்கப்பட்ட அபி கம்பனியிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

(i) நிதிநிலைமைக்கூற்று உருப்படிகள்:-

| | 2014.03.31ஆம் திகதியில் (ரூபா 000) | 2015.03.31 ஆம் திகதியில் (ரூபா 000) |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 700 | 950 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 300 | 600 |
| தொகுதிக் கடன்கள் | 300 | 200 |
| வியாபார சென்மதிகள் | 200 | 300 |
| சென்மதி தொகுதிக் கடன் வட்டி | – | 20 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 50 | 40 |
| வங்கி மீதி | – | 40 |
| | 1550 | 2150 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - தேறிய பெறுமதி | 900 | 870 |
| இருப்புக்கள் | 150 | 450 |
| வியாபார வருமதிகள் | 200 | 300 |
| முற்பண செயற்பாட்டுச் செலவுகள் | – | 20 |
| வங்கி மீதி | 200 | – |
| கையிலுள்ள காசு | 100 | 510 |
| | 1550 | 2150 |

(ii) வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுத்த உருப்படிகள்

| | 2015.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு (ரூபா000) |
|---|---|
| விற்பனைகள் | 2000 |
| மொத்தலாபம் | 800 |
| ஏனைய வருமானம் | 50 |
| மொத்தச் செயற்பாட்டுச் செலவுகள் (பெறுமானத் தேய்வு | 410 |

உட்பட)

| | |
|---|---|
| வட்டிச் செலவுகள் | 40 |
| ஆண்டிற்கான வருமான வரி | 100 |

**(iii) ஏனைய தகவல்கள்**

- ஆதனம், பொதி மற்றும் உபகரணங்கள் அனைத்திற்கும் ஆரம்ப தேறிய பெறுமதியில் வருடாந்தம் 20% பெறுமானத் தேய்விடப்படும்.
- ஏனைய வருமானம் என்பது மோட்டார் வாகன அகற்றல் மீதான இலாபத்தை குறித்து நிற்கின்றது.
- இவ்வாண்டில் ஆதனம், பொதி மற்றும் உபகரணங்களில் ரூபா 230000 க்கு தளபாட கொள்வனவும் மோட்டார் வாகன அகற்றல் தவிர வேறு சேர்ப்பனவோ, அகற்றலோ இடம் பெறவில்லை.

வேண்டப்படுவது:-

*(1)* $LKAS-07$ இன்படி 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட அபி கம்பனியின் காசுப் பாய்ச்சல் கூற்றினை நேர் முறையில் தயாரிக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) வரையறுக்கப்பட்ட சங்கவி கம்பனியின் ஏடுகளிலிருந்து 01.04.2014 இல் பின்வரும் மீதிகள் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்குமுதல் (100 000 பங்குகள்) | ரூபா 1 000 000 |
| நிறுத்தி வைத்த இலாபம் | ரூபா 600 000 |

**பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றது.**

01.10.2014 - 5 பங்குகள் வைத்திருக்கும் ஒருவருக்கு 1 பங்கு என்ற விகிதத்தில் ஒவ்வொன்றும் ரூபா *20* விலையில் சாதாரண பங்குகள் விண்ணப்பத்தின் போது முழுப் பணமும் செலுத்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனையில் உரித்து வழங்கல் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயம் பங்குதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் செலுத்தப்பட்டதுடன் பங்குகள் உரியவாறு ஒதுக்கல் செய்யப்பட்டு ஒதுக்கல் கடிதம் அனுப்பப்பட்டது.

01.01.2015 - இத்தினத்தில் காணப்படும் ஒவ்வொரு 6 பங்குகளுக்கு 1 பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 25 விலையில் வழங்கி நிறுத்தி வைத்த வருவாய்களை மூலதனமாக்கியது.

வேண்டப்படுவது :-

*(1)* உரித்து வழங்கல், மூலதனமாக்கல் என்பவற்றுக்கான நாட்குறிப்புப் பதிவுகள்

*(2)* 31.03.2015 இல் கம்பனியின் உரிமை முதல் யாது? *(5 புள்ளிகள்)*

*06)* அ) பாடு மீன் விளையாட்டு கழகத்தின் *2014.03.31* இல் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு

| | (ரூபா 000) | (ரூபா 000) |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| விளையாட்டரங்கு | 500 | |
| உடற்பயிற்சி உபகரணங்கள் | 800 | 1300 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| வருமதி சந்தா | 50 | |
| வங்கி | 125 | |
| காசு | 40 | 215 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | |
| ஆயுள் சந்தா | 450 | |
| உடற்பயிற்சி உபகரண நிதி | 350 | 800 |

**<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>**

| | | |
|---|---|---|
| முற்பணச் சந்தா | 125 | |
| உடற்பயிற்சிக்கான முற்பணங்கள் | 40 | 165 |

**2015.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான தகவல்கள் பின்வருமாறு**

(i) சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

(ii) வருட சந்தாக் கட்டணத் தொகை ரூபா 5000 என்பதுடன், அங்கத்தவர்கள் 150 பேர் காணப்படுகின்றனர். இவர்களில் ரூபா 10000 வீதம் ஆயுள் சந்தா செலுத்திய 50 அங்கத்தவர்களும் உள்ளனர். ஆயுள் சந்தாவை 10 வருடங்களுக்கு வருமானமாக கருதுவது நிறுவனத்தின் கொள்கையாகும்.

(iii) வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற சந்தாக் கட்டணம் ரூபா 425000 ஆகும். இத்தொகையினுள் கடந்த வருட நிலுவைச் சந்தாக் கட்டணப் பெறுவனவும், எதிர்வரும் வருடத்திற்கு சந்தாக்கட்டணம் செலுத்திய 20 அங்கத்தவர்களினது சந்தா தொகையும் உள்ளடங்கியுள்ளது. வருட இறுதியில் 20 அங்கத்தவர்கள் இவ்வருடத்திற்கான அங்கத்துவ சந்தா கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை.

(iv) அங்கத்தவர்கள் தவிர்ந்த வெளிநபர்கள் நாளாந்தக் கட்டணம் ரூபா 200 செலுத்தி உடற்பயிற்சி பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 52 நாட்கள் 50 பேர் உடற்பயிற்சி வசதிகளை பெற்றுக்கொண்டு ரூபா 550 000 செலுத்தியுள்ளதுடன் மேலதிகமாக கிடைக்கப்பெற்ற தொகையானது எதிர்வரும் வருடத்திற்கான முற்பணத் தொகையாகும்.

(v) உடற்பயிற்சி உபகரணங்களுக்கு பொறுப்பாக இருக்கும் ஊழியருக்கு மாதாந்தம் ரூபா 10 000 சம்பளம் செலுத்தப்படுகிறது.

(vi) வருடத்தினுள் விளம்பரத்திற்காக ரூபா 80 000 மும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 250 000 மும் செலுத்தப்பட்டுள்ளது.

(vii) விளையாட்டரங்கு, உடற்பயிற்சி உபகரணங்கள் வருடாந்த முறையே 5% மும் 20% மும் ஒடுங்குபாக முறையில் தேய்விடப்படல் வேண்டும்.

(viii) விளையாட்டரங்கு அமைந்துள்ள கட்டடத்தின் ஒரு பகுதி மேசைப்பந்து விளையாட்டிற்காக வெளிநபரொருவருக்கு மாதாந்தம் ரூபா 10 000 இற்கு 2014.04.01 இல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் 18 மாதங்களிற்கான வாடகையை செலுத்தியுள்ளார்.

(ix) வருட இறுதியில் ரூபா 50 000 த்தை மீதியாக வைத்துக் கொண்டு எஞ்சிய சகல காசும் வங்கியிலிடப்பட்டது.

(x) வருடத்தினுள் உபகரணப் பராமரிப்புக்காக ரூபா 75000 செலவிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

*(1)* 2014.03.31 இல் உள்ள திரண்ட நிதி

*(2)* 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று

*(3)* 31.03.2015 இல் உள்ள நிதி நிலைமைக்கூற்று *(10 புள்ளிகள்)*

ஆ) மோகன் வியாபாரத்தின் 31.12.2014 ஆம் திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதி சமப்படவில்லை. இப்பரீட்சை மீதி வேறுபாட்டைப் பரிசோதனை செய்ததில் பின்வரும் பிழைகள் வெளிப்பட்டன.

(i) ரூபா 60 000 இற்கு வாங்கிய மோட்டார் வாகனம் 31.12.2014 இல் கொள்வனவு கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(ii) டிசம்பர் மாதத்தில் பெற்ற வட்டி ரூபா 33 000 ஆனது காசுப் புத்தகத்தில் சரியாகப் பதியப்பட்டிருந்த போதிலும் வட்டி வருமானக் கணக்கில் வரவுப் பக்கத்தில் 3300 ஆகப் பதியப்பட்டுள்ளது.

(iii) காசுக்கு விற்றுப்பெற்ற தொகையான ரூபா 120 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதியப்பட்டுள்ளது. இது சரியாகக் காசுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

(iv) 01.07.2014 இல் செலுத்திய அறுவகைச் செலவுகள் ரூபா 20 000 ஆனது காசுப் புத்தகத்தில் சரியாகப் பதியப்பட்ட போதும் அலுவலக உபகரணக் கணக்கில் ரூபா 200 000 ஆகப் பதியப்பட்டுள்ளது. இந்த உபகரணத்திற்கு பெறுமானத் தேய்வாக வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:-

*(1)* பிழைகளை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் *(5 புள்ளிகள்)*

*07)* அ) சூசை உற்பத்தி நிறுவனத்தின் 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்காகப் பின்வரும் தகவல்கள் பெயர்த்தெடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| இருப்புக்கள் 2014.04.01 இல் | |
| - மூலப்பொருட்கள் | 26 500 |
| - முடிவடைந்த பொருட்கள் | 10 000 |
| - நடைமுறை வேலை | 32 000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 162 000 |
| நேர்க்கூலிகள் | 231 000 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | 36 000 |
| தொழிற்சாலை மின்சாரம் | 10 900 |
| தொழிற்சாலை வாடகை | 1 500 |

**மேலதிக தகவல்கள்**

(i) 2015.03.31 இல் இருப்புக்கள்
- மூலப்பொருட்கள் ரூபா 16000
- நடைபெறும் வேலை ரூபா 8900
- முடிவடைந்த பொருட்கள் ரூபா 15000

(ii) உற்பத்தி செய்யப்பட்ட மொத்த அலகுகள் 5000

வேண்டப்படுவது

(1) உற்பத்திக் கிரயத்தை கணிக்கும் கூற்று

(2) ஒரு அலகை உற்பத்திக் கிரயத்தில் 20% கூட்டி விற்பனை செய்வதனால் ஒரு அலகுக்கான விற்பனை விலையைக் கணிப்பிடுக. (8 புள்ளிகள்)

ஆ) கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு இரட்டைப் பதிவு முறையினைப் பின்பற்றாத கம்சிகா வணிகத்தின் 2015.06.30 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(i) சொத்துக்களும் பொறுப்புக்களும்

| | 2014.06.30 (ரூபா) | 2015.06.30 (ரூபா) |
|---|---|---|
| காசு | 80 000 | 35 000 |
| இருப்புக்கள் | 35 000 | 48 000 |
| கடன்பட்டோர் | ? | 50 000 |
| கடன்கொடுத்தோர் | 30 000 | 14 000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயம்) | 150 000 | ? |

(ii) 2015.06.30 இல் முடிவடையும் வருடத்தினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் சில பின்வருமாறு

| | (ரூபா) |
|---|---|
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 223 000 |
| கொடுத்த கழிவு | 7 000 |
| செலுத்திய சம்பளம் | 19 000 |
| செலுத்திய ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 18 000 |
| காசுப் பற்று | 5 000 |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்திய காசு | 280 000 |
| பெற்ற கழிவு | 4 000 |

(iii) மேலதிக தகவல்கள்

- ✶ விற்பனையில் 20% இலாபம் பெறக்கூடியவாறு காசுக்கும் கடனுக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. உடன் காசு விற்பனை, கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு தவிர்ந்த வேறு காசுப் பெறுவனவுகள் இல்லை.
- ✶ 2015 யூன் மாதச் சம்பளம் ரூபா 8000 செலுத்தப்படவில்லை.
- ✶ 2015.06.30 இல் முடிவடையும் வருடத்திலிருந்து கடன்பட்டோரில் 5% த்தை ஐயக் கடனாக ஏற்பாடு செய்வதற்கும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு கிரயத்தில் 10% ம் பெறுமானத்தேய்வு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:-

(1) 2015.06.30 இல் முடிவடையும் ஆண்டுக்கான வருமானக்கூற்று

(2) 2015.06.30 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

(07 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education